[2023 நவம்பர் 18

(ஐ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 (சட்டமன்றப் பேரவையால் 21-4-2023 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2023), சட்டமன்றப் பேரவையால் 21–4–2023 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது. மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“21–4–2023 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்று, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 13–11–2023 அன்று திருப்பி அனுப்பப்பெற்ற 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2023) மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3–ல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2023) மீண்டும் நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு மீண்டும் ஏற்கப்பட்டது.

[பேரவைத் தலைவர்] [2023 நவம்பர் 18

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டு மீன்வளப் பல்கலைக்கழகத்தை அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அமைப்பதற்காக சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து, இந்தப் பல்கலைக்கழகத்தை முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் பெயரில், பெயர் மாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்தச் சட்டமுன்வடிவு 2020 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், 9 ஆம் நாள், அ.இ.அ.தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

இதுமட்டுமின்றி, இந்தப் பல்கலைக்கழகம் குறித்த வேறு சில திருத்தங்களும், இந்தச் சட்டமுன்வடிவில் இருந்தன. ஆனால், அன்றைய ஆளுநர் அவர்களும், இன்றைய ஆளுநர் அவர்களும் இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்காமல், தற்போது திருப்பி அனுப்பியுள்ளார்கள்.

இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் கிடைத்தால் மட்டுமே, முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பெயரில் இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் சட்டப்பூர்வமாக இயங்கிட இயலும். இதன் பிறகே இந்தப் பல்கலைக்கழகம் குறித்து மற்ற சட்டமுன்வடிவிலும் பெயர் மாற்றம் செயல்பாட்டிற்கு வரும்.

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ளாமல், அம்மையார் அவர்களின் பெயரில் இருந்த இந்தப் பல்கலைக்கழகத்திற்குப் பெயர் சூட்டுவதற்கான இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவினை எதிர்த்து, அவர்களது கட்சியினரே வெளிநடப்புச் செய்திருப்பது விந்தையாக உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், இவ்வாறு மறைந்த தலைவர்கள் பெயரில் செயல்பட்டு வரும் நிறுவனங்களையோ, திட்டங்களையோ மாற்றக்கூடாது என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் தொடர்ச்சியாகவே, அவரது பெயரை மீன்வளப் பல்கலைக்கழகத்திற்குச் சூட்டுவதற்கான சட்டமுன்வடிவினை மீண்டும் இந்த அவையில் நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

2023 நவம்பர் 18] [*திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்*]

அரசு கொண்டு வந்த சட்டமுன்வடிவினைப் படிக்காமல், கொஞ்சம்கூட புரிந்து கொள்ளாமல், மறைந்த முதல்வரின் பெயரை மாற்றுவதற்காக அரசு முயல்கிறது என்ற உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டை இந்த அவையில் பதிவு செய்துள்ளார்கள். இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கை (குறுக்கீடு) அது அவை குறிப்பிலிருந்து நீக்கப்படத் தேவையில்லை.*

(ஒ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 (சட்டமன்றப் பேரவையால் 10-5-2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2022) சட்டமன்றப் பேரவையால் 10-5-2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"10-5-2022 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்று, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 13-11-2023 அன்று திருப்பி அனுப்பப்பெற்ற 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2022) மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.